தி இந்து
CHENNAI
ஞாயிறு, மே 21, 2017 7




▲ தமிழ்நாடு சுயநிதி பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் கூட்டமைப்பு சார்பில் சென்னையில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கில் பேசுகிறார் அகில இந்திய தொழில் நுட்பக் கவுன்சில் தலைவர் பேராசிரியர் அனில் த.சகஸ்ரபுதே. உடன் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.எஸ்.முனிரத்தினம், உயர்கல்வித் துறை அமைச்சர் கே.பி.அன்பழகன், உயர் கல்வித்துறை முதன்மைச் செயலர் சுனில் பாலிவால் உள்ளிட்டோர்.

படம்: க.ஸ்ரீபரத்

# தமிழக மாணவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டும்

## ● தொழில் நிறுவனங்களுக்கு உயர்கல்வித் துறை அமைச்சர் வேண்டுகோள்

■ சென்னை

தமிழகத்தில் தொழில் தொடங்கும் நிறுவனங்கள் தமிழக மாணவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டும் என உயர்கல்வித் துறை அமைச்சர் கே.பி.அன்பழகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ்நாடு சுயநிதி பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் கூட்டமைப்பின் சார்பில் திறமையான பொறியாளர்களை உருவாக்குவது தொடர்பான கருத்தரங்கம் சென்னையில் நேற்று நடைபெற்றது. இந்த கருத்தரங்கை தமிழக உயர்கல்வித் துறை அமைச்சர் கே.பி.அன்பழகன், அகில இந்திய தொழில்நுட்பக் கவுன்சில் தலைவர் அனில் சகஸ்ரபுதே ஆகியோர் தொடங்கிவைத்தனர்.

பின்னர், அமைச்சர் கே.பி. அன்பழகன் பேசியதாவது: இந்திய அளவில் ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு சராசரியாக 27 கல்லூரிகள் உள்ளன. ஆனால், தமிழகத்தில் 37 கல்லூரிகள் உள்ளன. உயர் கல்வியை உயர்த்தும் நோக்கில், கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் 67 அரசு கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.

கல்வி நிறுவனங்கள் கால சூழலுக்கு ஏற்ப மாற்றமடைய வேண்டும். காலத்தால் ஏற்படும் மாற்றங்களை மாணவர்களும் உள்வாங்கிக்கொள்ள வேண்டும். உயர் கல்வி பயில்வோரின் எண்ணிக்கையை உயர்த்துவது மட்டுமல்லாமல் அவர்களுக்கு ஏற்ற வேலைவாய்ப்புகளையும் உருவாக்கித் தர வேண்டும். தமிழ்நாட்டில் தொழில் தொடங்கும் நிறுவனங்கள் தமிழக மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

துணைவேந்தர் இல்லாமல் அண்ணா பல்கலைக்கழக மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டது குறித்து சிலர் மாறுபட்ட கருத்துகளை கூறி வருகின்றனர். அண்ணா பல்கலைக்கழகத்துக்கு துணைவேந்தரை நியமிப்பதற்கான அனைத்து பணிகளையும் அரசு செய்து முடித்துவிட்டது. துணைவேந்தரை தேர்வு செய்ய தேடுதல் குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்த குழு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களின் பட்டியல் ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்படும். அந்த பட்டியலில் இருந்து துணைவேந்தரை தேர்வு செய்வது ஆளுநரின் கடமை.

கல்லூரிகளில் அதிக கட்டணம் வசூலிக்கப்படுவது குறித்து அரசின் கவனத்துக்கு கொண்டுவந்தால், அந்த கல்லூரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

> ▼ காலத்தால் ஏற்படும் மாற்றங்களை மாணவர்களும் உள்வாங்கிக்கொள்ள வேண்டும். உயர் கல்வி பயில்வோரின் எண்ணிக்கையை உயர்த்துவது மட்டுமல்லாமல் அவர்களுக்கு ஏற்ற வேலை வாய்ப்புகளையும் உருவாக்கித் தர வேண்டும்.

இந்த கருத்தரங்கில், இந்திய தொழில்நுட்பக் கல்வி கூட்டமைப்பின் தலைவர் பிரதாப்சிங் தேசாய், உயர்கல்வித் துறை முதன்மைச் செயலர் சுனில் பாலிவால், தமிழ்நாடு சுயநிதி பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.எஸ்.முனிரத்தினம் மற்றும்பல்வேறுமுன்னணிதொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

### 22 கல்லூரிகளை மூடுவதற்கு..

அகில இந்திய தொழில்நுட்பக் கவுன்சில் (ஏஐசிடிஇ) தலைவர் அனில் சகஸ்ரபுதே கூறுகையில், "நடப்பு கல்வியாண்டில் அகில இந்திய தொழில்நுட்ப கவுன்சிலின் கீழ் செயல்படும் கல்லூரிகளில் 311 கல்லூரிகளை தேர்ந்தெடுத்து நாடுமுழுவதும் திடீர் ஆய்வுகளை மேற்கொண்டோம். அதில் 189 கல்லூரிகளில் குறைபாடுகள் இருந்தது தெரியவந்தது. பின்னர், 169 கல்லூரிகள் தங்கள் குறைபாடுகளை சரிசெய்ததால் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய கல்லூரிகளில் 49 கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையை மேற்கொள்ள கூடாது என உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழகத்தைப் பொறுத்தவரை 41 கல்லூரிகளில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் 2 கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை நடத்தக்கூடாது என உத்தரவிட்டுள்ளோம். ஆய்வு செய்த கல்லூரிகளில் 4 கல்லூரிகளில் கடந்த ஆண்டே மாணவர் சேர்க்கை நடத்தப்படவில்லை.

தமிழகத்தில் ஏஐசிடிஇ-ன் கீழ் செயல்படும் 22 கல்லூரிகள் மூட விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்துள்ளன. ஆக மொத்தம் இந்தாண்டு தமிழகத்தில் 28 கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை நடைபெறாது.

எனவே, நடப்பு நிதியாண்டில் ஏஐசிஇடி-ன் கீழ் செயல்படும் பொறியியல் கல்லூரிகளில் 2.5 லட்சம் இடங்கள் இருக்கும். கடந்த ஆண்டு 2.70 லட்சம் இடங்கள் இருந்தன.

இதுதவிர, தமிழகத்தில் 16 புதிய கல்லூரிகள் நடப்பாண்டு தொடங்கப்பட உள்ளன. இதில் 8 பார்மஸி கல்லூரிகள், 2 பொறியியல் கல்லூரிகள், 2 அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள், 4 பிஜிடிஎம் படிப்பு தொடர்பான கல்லூரிகள் ஆகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

தினமலர்
சென்னை | செவ்வாய் | 23.5.2017



# பொறியியல் மாணவர்களுக்கு 'நீட்' தேர்வு வாய்ப்பில்லை

## தமிழக உயர்கல்வி துறை அமைச்சர் நம்பிக்கை

சென்னை, மே 23—

''அடுத்த ஆண்டு பொறியியல் படிக்க விரும்பும் மாணவர்களுக்கு, 'நீட்' தேர்வு நடத்த வாய்ப்பில்லை,'' என, தமிழக உயர்கல்வித் துறை அமைச்சர் அன்பழகன் கூறினார்.

தமிழ்நாடு சுயநிதி பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் கூட்டமைப்பு சார்பில், 'புதிய இந்தியாவை நிர்மாணிக்கக்கூடிய, திறமை வாய்ந்த புதுமைகளை புகுத்தும் மனப்பாங்கும், தொழில் முனைவு உத்தியும் கொண்ட பொறியாளர்களை உருவாக்குதல்' என்ற தலைப்பில், ஒரு நாள் கருத்தரங்கம், சென்னையில் நேற்று நடந்தது.

கருத்தரங்கை துவக்கி வைத்து, உயர்கல்வித் துறை அமைச்சர் அன்பழகன் பேசியதாவது:

இந்திய அளவில் உள்ள கல்லூரிகளில், தமிழக கல்லூரிகளின் கல்வித்தரம் உயர்ந்துள்ளது. அறிவியல் தொழிற்நுட்பத்தில், பல அறிஞர்களை தமிழகம் தந்துள்ளது. நாடு டிஜிட்டல் முறைக்கு மாறி கொண்டிருக்கும் சூழலில், மாணவர்கள், ஆக்கப்பூர்வமான கண்டுபிடிப்புகளில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

அதற்கு ஏற்ப, கல்லூரிகளும், மாணவர்களை தயார் செய்ய வேண்டும். தொழில் நிறுவனங்கள், வேலைவாய்ப்பில், தமிழக இளைஞர்களுக்கு அதிக வாய்ப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

அகில இந்திய தொழில்நுட்ப கவுன்சிலின் தலைவர் அனில் த.சகஸ்ரபுதே பேசுகையில், ''சில மாநிலங்களை ஒப்பிடும் போது, தமிழகத்தில், 10ம் வகுப்பில், 96.2 சதவீதம் பேர் வெற்றி பெற்றதை மிக பெருமையாக கருதுகிறேன். மிகவும் தலைச்சிறந்த பல்கலைக் கழகங்கள் இங்கு உள்ளன.



■ தமிழ்நாடு சுயநிதி பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் கூட்டமைப்பு சார்பில், சிறந்த இன்ஜினியர்களை உருவாக்குவது குறித்த கருத்தரங்கம், சென்னையில் நடந்தது. இதில், அகில இந்திய தொழில் நுட்பக் கவுன்சில் தலைவர் அனில் த.சகஸ்ரபுதேவுக்கு நினைவு பரிசு வழங்கும், தமிழ்நாடு சுயநிதி பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் கூட்டமைப்பின் தலைவர் முனிரத்தினம். அருகில், அமைச்சர் அன்பழகன், உயர் கல்வித்துறை முதன்மை செயலர் சுனில்பாலிவால் மற்றும் இந்திய தொழில்நுட்ப கல்விக் கூட்டமைப்பின் தலைவர் பிரதாப் சிங் க.தேசாய்.

இளம் பொறியாளர்களிடம், தொழிற்நுட்ப திறன் அதிகரித்து உள்ளன. மக்களிடம் நம்பகத்தன்மையை பெற, கல்லூரிகள், கட்டமைப்புகளை மேம்படுத்த கூடுதல் கவனம் வேண்டும்,'' என்றார்.

உயர்கல்வித் துறை முதன்மை செயலர் சுனில்பாலிவால், இந்திய தொழில்நுட்ப கல்வி கூட்டமைப்பின் தலைவர் பிரதாப் சிங், தமிழ்நாடு சுயநிதி பொறியியல் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் கூட்டமைப்பின் தலைவர் முனிரத்தினம், துணைத் தலைவர் பால தண்டபாணி, செயலர் செல்வராஜ் மற்றும் பல்வேறு கல்லூரிகளின் பிரதிநிதிகள், தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### நடவடிக்கை பாயும்

செய்தியாளர்களிடம், அமைச்சர் அன்பழகன் கூறுகையில், ''அரசு நிர்ணயித்ததை விட, அதிக கட்டணம் வசூலிக்கும் கல்லூரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். அண்ணா பல்கலைக் கழக துணைவேந்தர் விரைவில் நியமிக்கப்படுவர். அடுத்த ஆண்டு, பொறியியல் படிப்பில் சேரும் மாணவர்களுக்கு, 'நீட்' தேர்வு நடக்க வாய்ப்பில்லை,'' என்றார்.



தமிழ்நாடு சுயநிதி பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் கூட்டமைப்பு சார்பில் நடந்த கருத்தரங்கில் அமைச்சர் கே.பி.அன்பழகன், உயர் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் சுனில் பாலிவால், அகில இந்திய தொழில் நுட்பக் கவுன்சில் தலைவர் அனில் த.சகஸ்ரபுதே, இந்திய தொழில் நுட்பக் கல்விக் கூட்டமைப்பு தலைவர் பேராசிரியர் பிரதாப்சிங் க.தேசாய், தமிழ்நாடு சுயநிதி பொறியியல் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் கூட்டமைப்பு தலைவர் ஆர்.எஸ்.முனிரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### துணைவேந்தர் கையெழுத்து இல்லாமல் வழங்கப்பட்ட

# பட்டமளிப்பு சான்றிதழ்களால் மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படாது

## உயர் கல்வித்துறை அமைச்சர் பேட்டி

சென்னை, மே.21–

துணைவேந்தர் கையெழுத்து இல்லாமல் வழங்கப்பட்ட அண்ணா பல்கலைக்கழக பட்டமளிப்பு சான்றிதழ்களால் மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படாது என்று உயர் கல்வித்துறை அமைச்சர் கே.பி. அன்பழகன் தெரிவித்துள்ளார்.

### கருத்தரங்கம்

தமிழ்நாடு சுயநிதி பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் கூட்டமைப்பு சார்பில், 'புதிய இந்தியாவை நிர்மாணிக்க கூடிய, திறமை வாய்ந்த, புதுமைகளை புகுத்தும் மனப்பாங்கும், தொழில் முனைவு உத்தியும் கொண்ட என்ஜினீயர்களை உருவாக்குதல்' என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கம், சென்னை அண்ணாசாலையில் உள்ள ஒரு நட்சத்திர ஓட்டலில் நேற்று நடந்தது. கருத்தரங்கை தமிழக உயர் கல்வித்துறை அமைச்சர் கே.பி.அன்பழகன் குத்துவிளக்கேற்றி தொடங்கிவைத்தார்.

அகில இந்திய தொழில் நுட்ப கவுன்சில் தலைவர் பேராசிரியர் அனில் சகஸ்ரபுதே, இந்திய தொழில்நுட்ப கல்வி கூட்டமைப்பின் தலைவர் பேராசிரியர் பிரதாப்சிங் தேசாய், உயர் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் சுனில் பாலிவால், தமிழ்நாடு சுயநிதி பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.எஸ்.முனிரத்தினம் ஆகியோர் கருத்தரங்கில் உரையாற்றினர்.

### தமிழக மாணவர்களுக்கு முன்னுரிமை

கருத்தரங்கில் அமைச்சர் கே.பி.அன்பழகன் பேசியதாவது:–

ஏழை–எளிய மாணவர்களுக்காக, தமிழகத்தில் கடந்த 5 ஆண்டுகளில் 67 அரசு கல்லூரிகள் தொடங்கப்பட்டு உள்ளது. தெற்கு ஆசிய நாடுகளில் உள்ள முதல் 150 பல்கலைக்கழகத்தில் அண்ணா பல்கலைக்கழகம், சென்னை பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம் மற்றும் தமிழக வேளாண் பல்கலைக்கழகம் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

இதேபோல பல்கலைக்கழக மானியக்குழுவின் ஆற்றல்சார் 15 பல்கலைக்கழகங்கள் பட்டியலில் சென்னை பல்கலைக்கழகம் மற்றும் மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் இடம் பிடித்துள்ளன. தொழில் நிறுவனங்களில் தமிழக மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

### நாட்டுக்கு சேவை செய்யும் வகையில்...

அகில இந்திய தொழில் நுட்ப கவுன்சில் தலைவர் பேராசிரியர் அனில் சகஸ்ரபுதே பேசியதாவது:–

கல்வியில் மற்ற மாநிலங்களை விட தமிழகம் அதிகம் வளர்ச்சி கண்டுள்ளது. ஆராய்ச்சி மாணவர்கள் நாட்டின் வளர்ச்சிக்காக புதுமையானவற்றை கண்டுபிடிக்க வேண்டும். கல்வி நிறுவனங்கள் நாட்டுக்கு சேவை செய்யும் வகையிலும், தகவல் தொடர்பு திறனை மேம்படுத்திக்கொள்ளும் வகையிலும் மாணவர்களை உருவாக்க வேண்டும். தொழில்நுட்ப கவுன்சில் சார்பில் சான்றிதழ் படிப்புகளை அறிமுகப்படுத்த உள்ளோம்.

இவ்வாறு அவர் பேசினார்.

### பாதிப்பு ஏற்படாது

கருத்தரங்குக்கு பின்னர் அமைச்சர் கே.பி..அன்பழகன் அளித்த பேட்டியில், "மாணவர்களிடம் அதிக கட்டணம் வசூலிக்கும் தனியார் கல்லூரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். அண்ணா பல்கலைக்கழகத்துக்கு துணைவேந்தர் நியமிப்பதற்காக, தேர்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. விரைவில் துணைவேந்தர் நியமிக்கப்படுவார். துணை வேந்தர் கையெழுத்து இல்லாமல் வழங்கப்பட்ட அண்ணா பல்கலைக்கழக பட்டமளிப்பு சான்றிதழ்களால் மாணவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. அடுத்த ஆண்டு என்ஜினீயரிங் படிப்புக்கு 'நீட்' தேர்வு நடைபெற வாய்ப்பு இல்லை" என்று கூறினார்.

# பொறியியல் கல்லூரிப் பேராசிரியர்களுக்கு ஐஐடி பேராசிரியர்கள் மூலம் பயிற்சி

## ஏஐசிடிஇ தலைவர் தகவல்



கருத்தரங்கில் பங்கேற்றவர்கள் (இடமிருந்து) கூட்டமைப்புத் தலைவர் ஆர்.எஸ்.முனிரத்தினம், உயர் கல்வித் துறை அமைச்சர் கே.பி.அன்பழகன், அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் கவுன்சில் தலைவர் அனில் சகஸ்ரபுதே, உயர் கல்வித் துறை முதன்மைச் செயலர் சுனில் பாலிவால்.

**சென்னை, மே 20:** மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தப் பொறியியல் கல்லூரிப் பேராசிரியர்களுக்கு ஐஐடி பேராசிரியர்கள் மூலம் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும் என்று

அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் கவுன்சில் (ஏஐசிடிஇ) தலைவர் அனில் சகஸ்ரபுதே கூறினார்.

தமிழ்நாடு சுயநிதிப் பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் கூட்டமைப்பு இணைந்து 'புதிய இந்தியாவை நிர்மாணிக்கக் கூடிய திறமை வாய்ந்த புதுமைகளைப் புகுத்தும் மனப்பாங்கும் தொழில்முனைவு உத்தியும் கொண்ட பொறியாளர்களை உருவாக்குதல்' என்னும் தலைப்பில் சென்னையில் சனிக்கிழமை கருத்தரங்கை நடத்தின. கருத்தரங்கைத் தொடங்கி வைத்து அனில் சகஸ்ரபுதே பேசியது:

**திடீர் ஆய்வு:** தமிழகத்தின் 41 கல்லூரிகள் உட்பட நாடு முழுவதும் 311 பொறியியல் கல்லூரிகளில் திடீர் ஆய்வு மேற்கொண்டதில் 187 கல்லூரிகளில் போதிய கட்டமைப்பு வசதிகள் இல்லாதது தெரியவந்தது. இதை மேம்படுத்திக் கொள்ள குறிப்பிட்ட காலம் அவகாசம் வழங்கப்பட்டது.

இதையடுத்து 168 கல்லூரிகள் தொடர்ந்து செயல்பட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 83 கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. 49-இல் மாணவர் சேர்க்கை நடத்த அனுமதி வழங்கப்படவில்லை. 18 கல்லூரிகளை மூடவோ அல்லது கட்டமைப்பு வசதிகள் உள்ள பாடப் பிரிவுகளில் மட்டும் மாணவர் சேர்க்கை நடத்தவோ அனுமதிக்கப்பட்டது. 2 கல்லூரிகள் மூடப்பட்டது.

ஒவ்வோர் ஆண்டும் நாடு முழுவதும் பொறியியல் கல்லூரிகளில் சராசரியாக 45 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை மாணவர் சேர்க்கை குறைந்து வருகிறது. தொடர்ந்து 5 ஆண்டுகள் 30 சதவீதத்துக்கும் குறைவாக மாணவர் சேர்க்கை நடக்கும் கல்லூரிகள் கட்டாயம் மூடப்படும்.

**மாணவர்களுக்கு உதவும் வகையில்...** வேலைவாய்ப்பை அதிகரிக்கும் வகையில் பயிலும் போதே மாணவர்களுக்கு மொழித் திறன், தொழில்நுட்பப் புலமையில் அதிக கவனம் செலுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் இதற்காக முதல் கட்டமாக நாடு முழுவதும் 100 கல்லூரிப் பேராசிரியர்களுக்கு ஐஐடி வல்லுநர்களைக் கொண்டு 4 வாரங்களுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது. அடுத்த ஆண்டு அனைத்துக் கல்லூரிகளுக்கும் இப்பயிற்சி விரிவுபடுத்தப்படும்.

**பி.இ. படிப்புக்கு நீட் தேர்வு எப்போது?** பொறியியல் படிப்பு மாணவர் சேர்க்கைக்கு நீட் பொதுத் தேர்வு நடத்தத் திட்டமிட்டுள்ளோம். இதுகுறித்து அனைத்து மாநிலங்களுடன் பேச்சு நடத்தி வருகிறோம். அதன் மூலம் சில திருத்தங்களை மேற்கொண்டு பிறகு நிச்சயம் நீட் தேர்வு நடத்தப்படும்.

**22 கல்லூரிகள் மூடல்:** தமிழகத்தில் 22 தனியார் சுயநிதிப் பொறியியல் கல்லூரிகளை மூட விருப்பம் தெரிவித்துள்ளன. பட்டம் வழங்கும் பல்கலைக்கழகம் மற்றும் மாநில அரசின் தடையில்லாச் சான்றுடன் விண்ணப்பிக்க வேண்டியது அவசியம்.

விண்ணப்பித்துள்ள 22 கல்லூரிகளிடமும் சான்றிதழ்களைக் கேட்டுள்ளோம். அதுவரை நாங்கள் அதிகாரப்பூர்வமாக மூட அனுமதிக்கா விட்டாலும் மேற்கொண்டு மாணவர் சேர்க்கை நடத்த வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார் அனில் சகஸ்ரபுதே.

**தமிழக உயர்கல்வித் துறை அமைச்சர் கே.பி.அன்பழகன் பேசியது:** நாட்டில் உயர்கல்வியின் தரம் உயர்த்தப்பட வேண்டும். மாணவர்கள் தொழில்முனைவோராக உயரும் வகையில் அவர்களது பாடத்திட்டம் இருக்க வேண்டும். நாட்டிலேயே தமிழகத்தில்தான் கல்லூரிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை மிக அதிகம்.

சர்வதேச அளவில் உயர்கல்வித் துறையில் ஏற்பட்டு வரும் மாற்றங்களுக்கு ஏற்ப, தொழிற்கல்வியை மேம்படுத்த பொறியியல் கல்லூரிகள் தரத்தை மேம்படுத்த வேண்டும். மாணவர்கள் ஆராய்ச்சியில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

முன்னதாக தமிழ்நாடு சுயநிதி பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் கூட்டமைப்புத் தலைவர் ஆர்.எஸ்.முனிரத்தினம் வரவேற்றார். உயர் கல்வித் துறை முதன்மைச் செயலர் சுனில் பாலிவால், இந்திய தொழில்நுட்பக் கல்வி கூட்டமைப்பின் தலைவர் பிரதாப்சிங் கே.தேசாய் உள்ளிட்டோர் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

# பொறியியல் பாடப்பிரிவுகளுக்கு அடுத்தாண்டு நீட் தேர்வு இல்லை



தமிழ்நாடு சுயநிதி பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் கூட்டமைப்பு சார்பில் சென்னையில் நேற்று கருத்தரங்கம் நடந்தது. இதில், ஏஐசிடிஇ தலைவர் அனில் சகஸ்ரபுதே, அமைச்சர் அன்பழகன், அரசு முதன்மை செயலாளர் சுனில் பாலிவால், கூட்டமைப்பின் தலைவரும், ஆர்.எம்.கே கல்வி குழும தலைவருமான முனிரத்தினம் உள்ளிட்டோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

## அமைச்சர் அன்பழகன் பேட்டி

சென்னை, மே 21: பொறியியல் பாடப்பிரிவுகளுக்கு அடுத்தாண்டு நீட் தேர்வு இல்லை என்று உயர்கல்வி துறை அமைச்சர் அன்பழகன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு சுயநிதி பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் கூட்டமைப்பு சார்பில், பொறியாளர்கள் தொடர்பான ஒருநாள் கருத்தரங்கம், சென்னை அண்ணாசாலையில் உள்ள நட்சத்திர ஓட்டல் ஒன்றில் நேற்று நடந்தது. தமிழக உயர்கல்வி துறை அமைச்சர் கே.பி.அன்பழகன் கலந்து கொண்டு கருத்தரங்கை துவக்கி வைத்தார்.

அகில இந்திய தொழில்நுட்ப கவுன்சில் (ஏஐசிடிஇ) தலைவர் அனில் த.சகஸ்ரபுதே, உயர்கல்வி முதன்மை செயலாளர் சுனில் பாலிவால் ஐஏஎஸ், இந்திய தொழில்நுட்ப கல்வி கூட்டமைப்பு தலைவர் பிரதாப்சிங் க.தேசாய், தமிழ்நாடு சுயநிதி பொறியியல் கலை, அறிவியல் கல்லூரிகள் கூட்டமைப்பு தலைவரும், ஆர்.எம்.கே.கல்வி குழும தலைவருமான ஆர்.எஸ்.முனிரத்தினம் ஆகியோர் கருத்தரங்கில் உரையாற்றினர்.

நிகழ்ச்சிக்கு பின்னர் அமைச்சர் அன்பழகன் நிருபர்களிடம் கூறியதாவது: "அதிக கட்டணம் வசூலிக்கும் கல்லூரிகள் மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டன. அதற்கான தேர்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. மிக விரைவில் துணை வேந்தர் நியமிக்கப்படுவார். பட்டமளிப்பு சான்றிதழில் துணை வேந்தர் கையெழுத்து இல்லாததால் மாணவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது" என்றார்.

கூட்டமைப்பு தலைவரும், ஆர்.எம்.கே கல்வி குழும தலைவருமான ஆர்.எஸ்.முனிரத்தினம் பேசியதாவது: புதிய இந்தியாவை நிர்ணயிப்பதில் பொறியியல் கல்வி மிக முக்கியம். தமிழகத்தில் 563 தனியார் பொறியியல் கல்லூரிகளும், 43 தனியார் பொறியியல் பல்கலைக்கழகங்களும் உள்ளன. இவற்றின் மூலம் லட்சக்கணக்கான பொறியாளர்கள் உருவாகி நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளனர். ஆனால், நாடு முழுவதும் பொறியியல் கல்வியின் புகள் குறைந்துவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

> பொறியியல் கல்வி மீதான ஆர்வம் மாணவர்களிடையே குறையத் தொடங்கி உள்ளது. இது நாட்டின் வளர்ச்சிக்கு உகந்தது அல்ல.

இதனால் பொறியியல் கல்வி மீதான ஆர்வம் மாணவர்களிடையே குறையத்தொடங்கி உள்ளது. இது நாட்டின் வளர்ச்சிக்கு உகந்தது அல்ல. இந்த நிலையை மத்திய, மாநில அரசுகள் மாற்ற வேண்டும். உயர்கல்வியில் தனியார் பொறியியல் கல்லூரிகளின் பங்களிப்பு மிக முக்கியம். அரசு கல்லூரிகளால் மட்டும் மாற்றம் ஏற்படுத்த முடியாது. தனியார் பொறியியல் கல்லூரி நிறுவனங்களை சந்தேக கண் கொண்டு பார்ப்பது துரதிர்ஷ்டவசமானது.

இந்திய அளவில் தரம் வாய்ந்த பொறியியல் கல்வி நிறுவனங்கள் தமிழகத்தில் இயங்கி வருகின்றன. தனியார் பொறியியல் கல்வி நிறுவனங்களை கைதூக்கிவிடும் மாபெரும் பொறுப்பு மத்திய, மாநில அரசுகளுக்கு உள்ளது. எங்களுக்கு உள்ள நெருக்கடியிலும் மனம் தளராமல் புதிய இந்தியாவை உருவாக்க அரசு மேற்கொள்ளும் அனைத்து திட்டங்களும் வெற்றி பெற தோள் கொடுத்து சுயநிதி பொறியியல் கல்வி நிறுவனங்கள் நிற்கும் என்ற உறுதியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

கருத்தரங்கில் கூட்டமைப்பு செயலாளர் செல்வராஜ், துணை தலைவர்கள் நாஞ்சில் எம்.வின்சன்ட், பேராசிரியர் கனகராஜ், பால தண்டபாணி,

# బంగారు భవితకు సన్నద్ధం చేయండి

## ఉన్నత విద్యాశాఖ మంత్రి అన్బళగన్ పిలుపు



మంత్రి అన్బళగన్‌ను సత్కరిస్తున్న నిర్వాహకులు

**చెన్నై (సాంస్కృతికం), న్యూస్‌టుడే:** బంగారు భవితకు విద్యార్థులను సన్నద్ధులను చేసేందుకు కృషి జరగాలని రాష్ట్ర ఉన్నత విద్యాశాఖ మంత్రి కేపీ అన్బళగన్ పిలుపునిచ్చారు. రాష్ట్ర స్వయం పోషక, వృత్తి విద్యా, ఆర్ట్స్, సైన్స్ కళాశాలల సమాఖ్య ఆధ్వర్యంలో 'నవభారత నిర్మాణానికి సృజనాత్మక బుద్ధి కుశలత, ఔత్సాహిక వ్యాపార శక్తి సామర్థ్యాలకు అనుగుణమైన ఇంజినీర్ల రూపకల్పన' అనే అంశంపై శనివారం జరిగిన సదస్సును జ్యోతి ప్రజ్వలన చేసి లాంఛనంగా ప్రారంభించారు. అనంతరం ప్రసంగిస్తూ దివంగత ముఖ్యమంత్రి జయలలిత తమిళనాడును దేశమేటి రాజధానిగా రూపొందించేందుకు పలు ప్రతిష్ఠాత్మక పథకాలను ప్రవేశపెట్టారన్నారు. తద్వారా విద్యారంగంలో రాష్ట్రం గణనీయమైన ప్రగతిని సాధించిందని గణాంకాలతో సహా వివరించారు. ప్రస్తుతం నగరంలోని రాజీవ్‌గాంధీ సాలై ప్రతిష్ఠాత్మక ఐటీ సంస్థల కేంద్రంగా భాసిల్లుతోందన్నారు. కాలానుగుణంగా వస్తున్న మార్పులకు తగినట్లు విద్యార్థులు నైపుణ్యంతో మెరుగుపడాలన్నారు. మరోవైపు ఉద్యోగావకాశాలు కూడా పెరగాలన్నారు. అందరూ ఉద్యోగం కోసం పరుగులు తీయక స్వయం ఉపాధి మార్గాలను పెంపొందించుకునేందుకు వీలుగా విద్యార్థులను తయారు చేయాలని విద్యా సంస్థలకు సూచించారు. విద్యార్థులు ప్రజ్ఞాపాటవాలు మెరుగుపరుచుకునేందుకు అవసరమైన చిట్కాలను తెలిపారు. లక్ష్యసాధనకు ఏకాగ్రతతో నిరంతర కృషి అవసరమన్నారు. ఓ వైపు నవీన భారత రూపకల్పనకు, మరోవైపు విద్యార్థుల బంగారు భవితకు ప్రస్తుత సదస్సు మార్గదర్శకాలను రూపొందిస్తుందని ఆకాంక్షించారు. ఏఐసీటీఈ ఛైర్మన్ డి.సహస్రబుద్ధి ప్రారంభోపన్యాసం చేస్తూ ప్రస్తుతం మనదేశంలో గణనీయమైన మార్పులు చోటు చేసుకుంటున్నాయన్నారు. మార్పులకు అనుగుణంగా సృజనాత్మక బుద్ధికుశలతతో కూడిన ఇంజినీర్ల అవసరం అధికమవుతోందన్నారు. ఇందుకు దేశంలోని ఐఐఎస్‌లు, ఐఐటీలు, ఐఐఎంలు, ఎన్ఐటీలాంటి ప్రతిష్ఠాత్మక విద్యా సంస్థలు సమష్టి కృషి చేసేందుకు ముందుకు రావాలన్నారు. మరోవైపు ఆచార్యులు, విద్యార్థులు, పారిశ్రామికవేత్తలు కూడా తమ వంతు కృషి చేసేందుకు సిద్ధం కావాలన్నారు. ప్రపంచీకరణ కారణంగా అపారమైన తెలివితేటలు, నాణ్యత, నమ్మకం మరింత మెరుగుపడాలని కోరారు. రాష్ట్ర ఉన్నత విద్యాశాఖ ప్రధాన కార్యదర్శి సునీల్ పాలీవాల్, దిల్లీకి చెందిన ఇండియన్ సొసైటీ ఫర్ టెక్నికల్ ఎడ్యుకేషన్ (ఐఎస్‌టీఈ) అధ్యక్షుడు ఆచార్య ప్రతాప్ సిన్హ్ కె.దేశాయ్ ప్రభృతులు కూడా పాల్గొన్నారు. ముందుగా సమాఖ్య అధ్యక్షుడు, ఆర్ఎంకే విద్యా సంస్థల అధినేత ఆర్.ఎస్.మునిరత్నం స్వాగతం పలుకుతూ సదస్సు లక్ష్యాలను వివరించారు. సదస్సు నిర్వహణకు అన్నా విశ్వవిద్యాలయం, నాస్కామ్, ఏఐఎంవో, ఐఎస్‌టీఈ సంస్థలు సహకరించాయన్నారు. అతిథుల సేవలను పరిచయం చేసి సముచిత రీతిన సత్కరించారు. అనంతరం 21వ శతాబ్దానికి తగినట్లు ఇంజినీర్ల రూపకల్పనలో పరిశ్రమల బాధ్యత, విద్యా సంస్థల బాధ్యత, సృజనాత్మక ఔత్సాహిక వ్యాపారుల రూపకల్పన- అంశాలపై మూడు విడతలుగా సదస్సు జరిగింది. తమిళ తల్లి ప్రార్థనతో మొదలైన కార్యక్రమం జాతీయ గీతాలాపనతో ముగిసింది.

చెన్నై | ఆదివారం | మే | 21 | 2017 సాక్షి

# యువతకు ప్రాధాన్యం ఇవ్వాలి

- రాష్ట్ర ఉన్నత విద్యాశాఖ మంత్రి కేపీ అన్బళగన్
- విజయవంతంగా ముగిసిన సదస్సు

కొరుక్కుపేట:

రాష్ట్రంలో కొత్తగా పరిశ్రమలను స్థాపించేవారు ఇక్కడి యువతకు అధిక ప్రాధాన్యం ఇవ్వాలని రాష్ట్ర ఉన్నత విద్యాశాఖా మంత్రి కేపీ అన్బళగన్ పేర్కొన్నారు. తమిళనాడు స్వయం ప్రతిపత్తి వృత్తి విద్య, ఆర్ట్స్ అండ్ సైన్స్ కళాశాలల సమాఖ్య ఆధ్వర్యంలో శనివారం నగరంలోని ఓ హోటల్‌లో 'క్రియేటింగ్ కాంపిటెంట్ ఇంజినీర్స్ ఫర్ ఏ న్యూ ఇండియా, విత్ ఇన్నోవేటివ్ మైండ్స్ అండ్ ఎంటర్ ప్రీనిరియల్ కేపబులిటీ' అనే అంశంపై ఒకరోజు సదస్సు జరిగింది. ఈ సభకు మంత్రి కేపీ అన్బళగన్ అధ్యక్షత వహించారు. ఆలిండియా కౌన్సిల్ ఫర్ టెక్నికల్ ఎడ్యుకేషన్ (ఏఐసీటీఈ)- న్యూఢిల్లీ చైర్మన్, ప్రొఫెసర్ అనీల్ డీ.సహస్రబుదే జ్యోతి ప్రజ్వలన చేసి సదస్సు ప్రారంభించారు. మంత్రి మాట్లాడుతూ 2015-16 గణాంకాలను చూస్తే దేశంలో 799 విశ్వవిద్యాలయాలు ఉన్నాయని, అందులో తమిళనాడులో 55 విశ్వవిద్యాలయాలతో పాటు 2,344 కళాశాలలు ఉన్నాయని తెలిపారు. ప్రపంచవ్యాప్తంగా ఉన్న విశ్వవిద్యాలయాల్లో మొదటి 159 స్థానాల్లో తమిళనాడుకు చెందిన నాలుగు విశ్వవిద్యాలయాలు స్థానం పొందడం సంతోషకరమన్నారు. రాష్ట్రంలో కొత్తగా పరిశ్రమలు స్థాపించే వారు ఈ రాష్ట్ర యువతకు ప్రాధాన్యం ఇవ్వాలన్నారు.



మంత్రి అన్బలగన్‌ను సత్కరిస్తున్న ఆర్ఎస్ మునిరత్నం. చిత్రంలో ప్రొఫెసర్ అనీల్ డి.సహస్రబుదే

## మోదీ దేశాన్ని అభివృద్ధివైపు నడిపిస్తున్నారు..

ప్రొఫెసర్ అనీల్ డి.సహస్రబుదే మట్లాడుతూ సాంకేతిక ఆలోచనలతో భారత యువత అడుగులు వేస్తోందన్నారు. ప్రధాని నరేంద్రమోదీ డిజిటల్ ఇండియా, స్వచ్ఛభారత్, న్యూ ఇండియా, స్టార్టప్ ఇండియా అంటూ భారత్‌ను అభివృద్ధి పథంలో తీసుకెళుతున్నారని తెలిపారు. యువత నైపుణ్యాలను మెరుగు పరుచుకుని ఉద్యోగాల కోసం ఎదురు చూడకుండా ఔత్సాహిక పారిశ్రామిక వేత్తలుగా ఎదగాలని అభిప్రాయపడ్డారు. అంతకు ముందు తమిళనాడు స్వయం ప్రతిపత్తి వృత్తి విద్యా, ఆర్ట్స్ అండ్ సైన్స్ కళాశాలల సమాఖ్య అధ్యక్షుడు ఆర్ఎస్ మునిరత్నం సదస్సు లక్ష్యాలను వివరించి అతిథులను దుశ్శాలువాలు, జ్ఞాపికలతో సత్కరించారు. రాష్ట్ర ఉన్నత విద్యాశాఖ ప్రిన్సిపల్ సెక్రటరీ సునీల్ పలివాల్, ఐఎస్‌టీఈ ప్రెసిడెంట్ ప్రతాప్ సిన్హా కే దేశాయ్, కళాశాల సమాఖ్య ఉపాధ్యక్షుడు బాల దండపాణి, కనకరాజ్, సెక్రటరీ డాక్టర్ సెల్వరాజ్‌తో పాటు పెద్దసంఖ్యలో ప్రతినిధులు పాల్గొన్నారు.

## ఉన్నత విద్యకు అమ్మ కృషి ఎనలేనిది..

ఉన్నత విద్యకు ప్రాధాన్యత ఇవ్వడమే కాకుండా సాంకేతిక పరిజ్ఞానంతో కూడిన విద్యావిధానానికి దివంగత ముఖ్యమంత్రి జయలలిత ఎంతో కృషి చేశారన్నారు. కాలానుగుణంగా వస్తున్న మార్పులకు అనుగుణంగా విద్యార్థులు నైపుణ్యతను మెరుగు పరుచుకోవాలన్నారు. ప్రైవేటు ఇంజినీరింగ్ కళాశాలలు ఉన్నత ప్రమాణాలతో కూడిన విద్యను అందిస్తున్నాయని, అయితే కళాశాలల ఎదుర్కొంటున్న సమస్యలను పరిష్కరించేందుకు చర్యలు తీసుకుంటామన్నారు.

ఆంధ్రజ్యోతి

తమిళనాడు ●ఆదివారం 21 మే 2017



ప్రైవేటు వృత్తివిద్యాకళాశాలల

# సమస్యలు పరిష్కారిస్తాం

- త్వరలో మూడు వర్శిటీలకు వీసీలు
- మంత్రి కేపీ అన్బళగన్

టి.నగర్: రాష్ట్రంలో ఉన్నత విద్యను పెంపొందించేందుకు ప్రభుత్వం తీవ్రమైన చర్యలు తీసుకుంటోందని, ఆ దిశగా ప్రైవేట్ వృత్తివిద్యా కళాశాలు ప్రస్తుతం ఎదుర్కొంటున్న ఆర్థిక, సాంకేతిక పరమైన సమస్యలను పరిష్క రిస్తాం దని ఉన్నత విద్యా శాఖ మంత్రి కేపీ అన్బళగన్ తెలిపారు. చెన్నైలో రాష్ట్ర స్వయంప్రతిపత్తి

మిగతా 2వ పేజీలో



కార్యక్రమంలో పాల్గొన్న అతిథులు, నిర్వాహకులు

# ప్రైవేటు వృత్తివిద్యాకళాశాలల సమస్యలు పరిష్కారిస్తాం

(మొదటిపేజీ తరువాయి)

ఆర్ట్స్ అండ్ సైన్స్ కళాశాలల సమాఖ్య ఆధ్వర్యంలో 'నవ్యభారతం కోసం సాంకేతిక నైపుణ్యాతలు కలిగిన ఇంజనీర్ల రూపకల్పన' అనే అంశంపై శనివారం ఉదయం జరిగిన సదస్సుకు అధ్యక్షత వహించి ఆయన ప్రసంగించారు. ఇటీవల అత్యుత్తమ విశ్వవిద్యాలయాలపై జాతీయస్థాయిలో నిర్వహించిన సర్వేలో రాష్ట్రానికి చెందిన అన్నా విశ్వవిద్యాలయం, మద్రాసు విశ్వవిద్యాలయం, భారతియార్ విశ్వవిద్యాలయం, రాష్ట్ర వ్యవసాయ విశ్వవిద్యాలయం ప్రతిభావంతమైనవని ఎంపిక చేశారని తెలిపారు. మాజీ ముఖ్యమంత్రి జయలలిత విద్యారంగంపై అత్యధిక దృష్టిని సారించేవారని, ఆమె హయాంలోనే ఒకే విడతగా 67 కళాశాలలు నెలకొల్పారని చెప్పారు. అసాధ్యాన్ని సుసాధ్యం చేయడం జయ అరుదైన గుణమని, మునుపటి ప్రభుత్వాలు నెరవేర్చలేకపోయిన వీరాణాం పథకాన్ని ఆమె చేపట్టి నగరానికి మంచినీరు సరఫరా చేయించారని కొనియాడారు. చెన్నై మేధానగరంగా పేరుగడించిందని వృత్తివిద్యలో ప్రైవేటు భాగస్వామ్యాన్ని దివంగత మాజీ ముఖ్యమంత్రి ఎంజీఆర్ ప్రోత్సహించారని, ప్రస్తుత ప్రభుత్వం కూడా ప్రైవేటు వృత్తి విద్యా కళాశాలలకు తన వంతు సహాయ సహకారాలను అందిస్తుందన్నారు. కాలానుగుణంగా వస్తున్న సాంకేతిక మార్పులను గమనించి అందుకు తగిన పాఠ్యాంశాలతో విద్యార్థులను తీర్చిదిద్దాలని విజ్ఞప్తి చేశారు. రాష్ట్ర స్వయంప్రతిపత్తి ఆర్ట్స్ అండ్ సైన్స్ కళాశాలల సమాఖ్య అధ్యక్షుడు, ఆర్ఎంకే విద్యా సంస్థల అధినేత ఆర్.ఎస్. మునిరత్నం స్వాగతోపన్యాసం చేస్తూ క్లిష్ట పరిస్థితుల్లో ఉన్న ప్రైవేటు స్వయం ప్రతిపత్తి కళాశాలల సమస్యలను కేంద్ర రాష్ట్ర ప్రభుత్వాలు పరిష్కరించాలని కోరారు. ప్రధాని మోదీ చేపట్టిన స్టార్టప్ ఇండియా కార్యక్రమానికి ప్రైవేటు ఇంజనీరింగ్ కళాశాలు తోడ్పడతాయన్నారు. రాష్ట్రంలో కొత్త పరిశ్రమలను నెలకొల్పితే ఇంజనీరింగ్ పట్టభద్రులకు ఉపాధి అవకాశాలు లభిస్తాయన్నారు. స్వాగతోపన్యాసం తర్వాత ఆయన ముఖ్య అతిథులందరినీ శాలువలతో జ్ఞాపికలతో సత్కరించారు. అఖిలభారత సాంకేతిక విద్యామండలి (ఏఐసీటీఈ) అధ్యక్షుడు ప్రొఫెసర్ అనిల్ డి.సహస్రాంబుదీ ప్రారంభోపన్యాసం చేస్తూ రెండేళ్లుగా దేశంలో విద్యారంగం అభివృద్ధి పథంలో పయనిస్తోందని, ప్రైవేట్ వృత్తి విద్యా కళాశాలలు నాణ్యమైన విద్యను అందించటంలో పోటీపడుతున్నాయని చెప్పారు. వృత్తి విద్యా ఉన్నత కోర్సులలో ప్రవేశం పొందే విద్యార్థులలో ఆంగ్ల భాషా పరిజ్ఞానాన్ని పెంపొందించడానికి తొలి సెమిస్టర్‌లో 'కమ్యూనికేషన్ ఇన్ ఇంగ్లీష్' పేరుతో ఓ పాఠ్యాంశాన్ని చేర్చనున్నామని తెలిపారు. నాణ్యమైన ఉన్నతమైన విద్యను అందించడంలో రాష్ట్రం ముందంజలో ఉందని ప్రశంసించారు. రాష్ట్రంలో ఏఐసీటీఈ కార్యాలయంలో కోసం ఉన్నత విద్యాశాఖ మంత్రి అన్బళగన్ ఎకరా స్థలాన్ని కేటాయించారని సభికుల హర్షధ్వానాల మధ్య ప్రకటించారు. ఈ సదస్సులో రాష్ట్ర ఉన్నతవిద్యాశాఖ ప్రిన్సిపల్‌సెక్రటరీ సునీల్ పాలివాల్, భారతీయ సాంకేతిక విద్యా సంఘం (ఐఎస్టీఈ) అధ్యక్షుడు ప్రతాప్ సిన్హా కే దేశాయ్ తదితరులు పాల్గొన్నారు.



మంత్రి కేపీ అన్బళగన్‌కు జ్ఞాపికను బహూకరిస్తున్న ఆర్.ఎస్. మునిరత్నం



ప్రొఫెసర్ అనిల్ డి.సహస్రాంబుదీకి జ్ఞాపికను బహూకరిస్తున్న ఆర్.ఎస్. మునిరత్నం

### మూడు వర్శిటీలకు త్వరలో వీసీలు..

ఈ సదస్సు తర్వాత మంత్రి కేపీ అన్బళగన్ పాత్రికేయులతో మాట్లాడుతూ, మూడు విశ్వవిద్యాలయాలలో ఖాళీగా ఉన్న వైస్‌ఛాన్సలర్ పోస్టులను త్వరలో భర్తీ చేయనున్నామని ప్రకటించారు. అన్నా విశ్వవిద్యాలయం, మద్రాసు విశ్వవిద్యాలయం, మదురై కామరాజర్ విశ్వవిద్యాలయాలకు వైస్‌ఛాన్సలర్లను త్వరలో నియమించనున్నామని, ఆ మేరకు సెర్చికమిటీ వీసీ పదవులకు అర్హులైనవారి పేర్లున్న జాబితాను గవర్నర్ పరిశీలనకు పంపనున్నదని తెలిపారు. ఇటీవల అన్నా విశ్వవిద్యాలయం స్నాతకోత్సవంలో వీసీ సంతకం లేకుండా కన్వీనర్ సంతకాలతో అందజేసిన పట్టాలు చెల్లుబాటు అవుతాయని, ఈ విషయంలో కొందరు అనుమానాలు వ్యక్తం చేయడం శోచనీయమని పేర్కొన్నారు.